# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,201 — 1960 සැප්තැම්බර් 16 වැනි සිකුරාදා — 16.9.1960

12,201 ம் இலக்கம்—1960 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 16 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 223 | ஆயவிற்பனையும் குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 228 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 228 | அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள்பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும், பிறவும் .. .. | 232 | நாணுவிதம் .. .. .. | — |


## பதவிகள்—வெற்றிடம்

### இலங்கை இராணுவத்தில் நிரந்தரப் படையினர் நியமனம்

இலங்கை இராணுவத்தில் நிரந்தரப் படையில், கீழ்க்காணப்படும் காலி ஸ்தானங்களுக்கு, அத்துடன் கொடுக்கப்பட்டுள்ள தகுதிகள் உடைய விண்ணப்பக் காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :

| | |
|---|---|
| (அ) இலங்கை ஆயுத தாங்கிப் படை .. | கோப்ரல் எழுதுவினைஞர் பொது வேலைகள் |
| (ஆ) ஆகாய விமான எதிர்ப்புப் பீரங்கிப் படை .. | படையினர் சமையற்காரர்கள் |
| (இ) இலங்கைப் பொறியியலாளர்கள் .. | கோப்ரல் இயந்திரம் பொருத்துவோர் (கருவி)<br>படையினர் எழுதுவினைஞர்கள்<br>படையினர் வாகனம் பழுதுபார்ப்பவர்கள்<br>படையினர் நுண்தொழிற் பண்டசாலையாளர்கள்<br>படையினர் கொல்லர்கள்<br>படையினர் கடைசற்காரர்கள் |
| (ஈ) இலங்கைப் பொறியியலாளர்கள் தொழிற் சேவைகள் | வறண்ட உத்தியோகத்தர் தரம் 2 உதவிப் பரிமாண அளவையாளர்<br>கோப்ரல் மேற்பார்வையாளர்கள் (கட்டுவேலை தரம் 2)<br>கோப்ரல் மேற்பார்வையாளர்கள் (மின்சாரமும் இயந்திரமும் தரம் 2)<br>கோப்ரல் நுண்தொழில் எழுதுவினைஞர்கள்<br>படையினர் நுண்தொழிற் பண்டசாலையாளர்கள்<br>படையினர் மேற்பார்வையாளர்கள் (கட்டுவேலை தரம் 3)<br>படையினர் நுண்தொழில் எழுதுவினைஞர்கள் |
| (உ) இலங்கைச் சேனை சேவைப்படை .. .. | கோப்ரல் எழுதுவினைஞர்-சுருக்குத் தட்டெழுத்தாளர்<br>கோப்ரல் எழுதுவினைஞர் பொதுவேலைகள் |
| (ஊ) இலங்கைச் சேனை ஆயுத நிருவாக படை .. | படையினர் சப்பாத்து பழுதுபார்ப்பவர்கள் |
| (எ) இலங்கை மின்சார இயந்திரத் தொழில் பொறியியலாளர்கள் | படையினர் கருவிகள் பழுதுபார்ப்பவர்கள்<br>படையினர் எழுதுவினைஞர்கள் பொது வேலைகள்<br>படையினர் மின் முலாமிடுவோர்<br>படையினர் வாகனம் சீர்படுத்துவோர்<br>படையினர் கடைசற்காரர்<br>படையினர் வாகனம் பழுதுபார்ப்பவர்கள் |
| (ஏ) இலங்கைச் சேனை பொது சேவைப் படை .. | சார்ஜன் (கல்விப் போதனாசிரியர்கள்)<br>படையினர் எழுது வினைஞர்கள் (பொது வேலைகள்) |
| (ஐ) மேளக்குழுவினர் இலங்கைச் சேனை பொது சேவைப் படை | லான்ஸ் கோப்ரல்<br>படையினர்கள் |

2. பொது நிபந்தனைகள் : விண்ணப்பக்காரர்கள் ஒவ்வொருவரும்—

(அ) இலங்கையராய் இருக்க வேண்டும் இலங்கையர் என்பது பரம்பரை இலங்கையர், அல்லது பதிவு செய்யப்பட்ட இலங்கையர் என கருத்து ;

(ஆ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் இவற்றுள் ஏதாவது ஒரு மொழியில் குறைந்தது 5 ம் வகுப்புச் சித்தியடைந்தவர்களாக இருக்க வேண்டும் ;

(இ) 5 அடி 4 அங்குலத்திற்குக் குறையாத உயரம் உடையவர்களாக இருக்க வேண்டும் ;

(ஈ) 1960 ம் ஆண்டு புரட்டாசி மாதம் 30 ந் திகதியன்று 18 வயதிற்கு மேற்பட்டவர்களாகவும், 40 வயதிற்கு உட்பட்டவர்களாகவும் இருக்க வேண்டும் ;

(உ) படைத் தளபதியின் திருப்திக்கேற்ப வைத்தியப் பரிசோதனை ஒன்றில் சித்தியடைய வேண்டும் ;
படைத் தளபதி தன் விருப்பத்தின்படி புறநடையான தகுதிகள் உடையவர்களை அவர்கள் 40 வயதிற்கு மேல் இருந்தாலும், அல்லது 5 அடி 4 அங்குலத்திற்குக் குறைவான உயரம் உடையவர்களாக இருந்தாலும் ஏற்றுக்கொள்ள முடியும்.

3. பழைய சேவைக் காலத்தை உடையவர்களுக்குச் சலுகை காட்டப்படும். அப்பேர்ப்பட்டவர்கள் இரண்டாம் பந்தியில் கேட்கப் பட்டவைகளுடன் கீழ்க் காணப்படுபவைகளையும் உடையவர்களாக இருந்தால் :—

(அ) இவர்கள் பிரித்தானிய சாம்ராச்சியப் படையுடன் இலங்கை இராணுவத்தில் சேர இதில் குறைந்தது ஒரு வருடமாவது சேவை செய்தவர்களாக இருக்கவேண்டும் ;

(ஆ) இவர்கள் இராணுவத்தில் இருந்து விலகியபொழுது இவர்களின் நடத்தை ஆகக் குறைந்தது, மிகவும் நல்லது என்றுவது தரம் குறிக்கப்பட்டிருக்க வேண்டும்.

4. தேவையான விசேட தகுதிகள்.—மேலே கேட்கப்பட்டிருக்கும் தகுதிகளுடன் கீழே குறிக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு நியமனங்களுக்கும் எதிரே கூறப்பட்டிருக்கும் விசேட தகுதிகளையுடையவர்களுக்குச் சலுகை காட்டப்படும் :—

| | |
|---|---|
| (அ) கோப்ரல் எழுதுவினைஞர் (பொதுவேலைகள்) இலங்கை ஆயுத தாங்கிப் படை | ஆங்கில கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சை வர்த்தக பாடங்களுடன் சித்தியடைந்தவர்களாகவும் ;<br>தட்டச்சில் ஒரு நிமிடத்தில் 30 அல்லது 40 சொற்கள் தட்டக்கூடிய திறமையுடைய வர்களாகவும் ;<br>கந்தோர்க் கடமைகளில் 5 வருடங்கள் அனுபவம் உடையவர்களாகவும் ;<br>சுருக்கெழுத்து எழுதக்கூடியதாகவும், சிங்களத்தில் தட்டெழுத்தும் தெரிந்த திருத்தல் பிரத்தியேக தராதரமாகக் கணிக்கப்படும் ;<br>40 வயதிற்கு உட்பட்டவர்களாகவும் இருக்கவேண்டும். |
| (ஆ) படையினர் சமையற்காரர்கள் ஆகாய விமான எதிர்ப் புப் பீரங்கிப் படை | 30 வயதிற்கு உட்பட்டவர்களாகவும் ;<br>கீழைத்தேச உணவு வகைகள் தயாரிக்கவும், சமைக்கவும் தெரிந்தவர்களாகவும் இருக்கவேண்டும். |
| (இ) (1) கோப்ரல் இயந்திரம் பொருத்துபவர் (கருவி) இலங்கைப் பொறியியலாளர்கள் | சிங்களம், ஆங்கிலம், தமிழ் இவற்றுள் ஏதாவது ஒரு மொழியில் 6 ம் வகுப்புச் சித்தியடைந்தவர்களாகவும் ;<br>மண் எடுக்கும் இயந்திரக் கருவிகளை பழுதுபார்ப்பதிலும், நிருவகிப்பதிலும் குறைந்தது 5 வருட அனுபவம் உடையவர்களாகவும் இருக்கவேண்டும். |
| (2) படையினர் எழுதுவினைஞர்கள் இலங்கைப் பொறியிய லாளர்கள் | ஆங்கிலம், சிங்களம், தமிழ் இவற்றுள் ஏதாவது ஒரு மொழியில் கனிஷ்ட பாட சாலைத் தராதரப் பத்திரப் பரீட்சை சித்தியடைந்தவர்களாக இருக்கவேண்டும் ;<br>எழுதுவினைஞராக வேலை செய்து அனுபவம் உடையவர்களுக்குச் சலுகை அளிக்கப்படும் ; |
| (3) படையினர் வாகனம் பழுதுபார்ப்பவர்கள் இலங்கைப் பொறியியலாளர்கள் | ஆங்கிலம், சிங்களம், தமிழ் இவற்றுள் ஏதாவது ஒரு மொழியில் 6 ம் வகுப்புச் சித்தியடைந்தவர்களாக இருக்கவேண்டும் ;<br>வாகனம் பழுதுபார்ப்பதில் அனுபவம் உடையவர்களுக்குச் சலுகை அளிக்கப்படும். |
| (4) படையினர் நுண்தொழிற் பண்டசாலையாளர்கள் இலங்கைப் பொறியியலாளர்கள் | ஆங்கிலம், சிங்களம், தமிழ் இவற்றுள் ஏதாவது ஒரு மொழியில் கனிஷ்ட பாட சாலைத் தராதரப் பரீட்சை சித்தியடைந்தவர்களாக இருக்க வேண்டும் ;<br>பண்டசாலையாளராகக் கடமையாற்றி அனுபவம் உடையவர்களுக்குச் சலுகை அளிக்கப்படும். |
| (5) படையினர் கொல்லர்கள் இலங்கைப் பொறியியலாளர் கள் | குறைந்தது 2 வருடகாலம் கொல்லர்களாக வேலை செய்து செய்கைமுறை அனுபவம் உள்ளவர்களாக இருக்கவேண்டும். |
| (6) படையினர் கடைசற்காரர்கள் இலங்கைப் பொறியிய லாளர்கள் | ஆங்கிலம், சிங்களம், தமிழ் இவற்றுள் ஏதாவது ஒரு மொழியில் 6 ம் வகுப்புச் சித்தியடைந்தவர்களாகவும் ;<br>கடைசல் பிடிக்கும் இயந்திரங்கள், அரைக்கும் இயந்திரங்கள் ஆகியவற்றின் செய்முறை வேலைகளில் குறைந்தது 2 வருட அனுபவம் உடையவர்களாகவும் இருக்கவேண்டும். |
| (ஈ) (1) வறண்ட் உத்தியோகத்தர் தரம் 2, உதவிப் பரிமாண அளவையாளர் இலங்கைப் பொறியியலாளர்கள் தொழிற் சேவைகள் | இலங்கை நுண்தொழிற் கல்லூரியில் பின்னேர வேளையில் கட்டிட அமைப்பு வேலை சம்பந்தமாக நடாத்தப்படும் வகுப்பில் 1 ம், 2 ம் வருடங்களில் எல்லாப் பாடங்களிலும் சித்தியடைந்தவர்களாக இருக்கவேண்டும்<br>அல்லது<br>இலங்கை நுண்தொழிற் கல்லூரியில் படவரை அறிஞர் தொழில் பயில்வோர் ஆரம்ப வகுப்பில் முழுவதும் சித்தியடைந்தவர்களாக இருக்க வேண்டும். விண்ணப்பதாரர் மேலதிகமாக பெரிய கட்டிட அமைப்பு வேலைகள், அல்லது படவரை கந்தோரில் ஒருவருடம் வேலை செய்து அனுபவம் உடையவர்களாகவும் இருக்கவேண்டும். |
| (2) கோப்ரல் மேற்பார்வையாளர்கள் (கட்டுவேலை தரம் 2) இலங்கைப் பொறியியலாளர்கள் தொழிற் சேவைகள் | கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்டை சித்தியடைந்தவர்களாகவும், இலங்கை நுண்தொழிற் கல்லூரியில் கட்டிட அமைப்பு வேலை சம்பந்தமான பின்னேர வகுப்பில் 1 ம் வருடம் பூர்த்தி செய்தவர்களாகவும், பெரியகட்டிட அமைப்பு வேலைகளில் 2 வருட அனுபவம் உடையவர்களாகவும் இருக்க வேண்டும்<br>அல்லது<br>கனிஷ்ட வகுப்புத் தகுதியுடன் பெரிய கட்டிட அமைப்பு வேலைகளில் குறைந்தது 3 வருடங்கள் வேலை செய்து அனுபவம் உடையவர்களாக இருக்கவேண்டும். |
| (3) கோப்ரல் மேற்பார்வையாளர்கள் (மின்சாரமும் இயந் திரமும் தரம் 2) இலங்கைப் பொறியியலாளர்கள் தொழிற் சேவைகள் | கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சை சித்தியடைந்தவர்களாகவும், இலங்கை நுண்தொழிற் கல்லூரியில் மின்சார இயந்திர (குறைநேர) வகுப்பில் 1 ம் வருடம் பூர்த்தி செய்தும், அரசாங்க அல்லது பிரக்யாதி பெற்ற பொறியியல் ஸ்தாபனத்தில் கீழ் மேற்பார்வையாளராக 2 வருடங்கள் வேலை செய்து அனுபவம் உடையவர்களாகவும் இருக்க வேண்டும்<br>அல்லது<br>கனிஷ்ட வகுப்புத் தகுதியுடன் அரசாங்க அல்லது பிரக்யாதி பெற்ற பொறியியல் ஸ்தாபனத்தில் குறைந்தது 3 வருடங்கள் மின்சார இயந்திர மேற்பார்வை யாளராகக் கடமையாற்றி அனுபவம் உடையவர்களாக இருக்கவேண்டும். |

(4) கோப்ரல் நுண்தொழில் எழுதுவினைஞர்கள்–இலங்கைப் பொறியியலாளர்கள் தொழிற் சேவைகள்

கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சை சித்தியடைந்தவர்களாகவும், நிமிடத்தில் 20 சொற்கள் தட்டெழுத்துத் தட்டக்கூடியவர்களாகவும் இருக்க வேண்டும். பொறியியல் ஸ்தாபனத்தில் நிதிக் கிளையில் குறைந்தது 2 வருட காலம் வேலை செய்து அனுபவம் உடையவர்களாகவும், பொருட்களுடைய விலைகள், தொழிலாளர்களுடைய சம்பளப் பட்டியல்கள் தயாரித்தல் முதலானவைகளில் ஓரளவு அறிவும், அல்லது பொறியியல் பண்டசாலையில் வரவு செலவுக் கணக்குப் புத்தகத்தை குறைந்தது இரண்டு வருடகாலம் நிருவகித்து அனுபவம் உடையவர்களாகவும் இருக்க வேண்டும்.

(5) படையினர் நுண்தொழிற் பண்டசாலையாளர்கள்–இலங்கைப் பொறியியலாளர்கள் தொழிற் சேவைகள்

கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சை சித்தியடைந்தவர்களாகவும், நிமிடத்தில் 15 சொற்கள் தட்டெழுத்துத் தட்டக் கூடியவர்களாகவும், பொறியியல் பண்டசாலை ஒன்றில் பண்டசாலையாளராகக் குறைந்தது 1 வருட அனுபவம் உடையவர்களாகவும் இருக்க வேண்டும். கட்டிட வேலை சம்பந்தமான எல்லாச் சாமான்களிலும், பொறியியல் பண்டசாலையிலும் அறிவு உடையதாய் இருத்தல் பிரத்தியேக தராதரமாகக் கணிக்கப்படும்.

(6) படையினர் மேற்பார்வையாளர்கள் (கட்டுவேலை தரம் 3)–இலங்கைப் பொறியியலாளர்கள் தொழிற் சேவைகள்

இலங்கை நுண்தொழிற் கல்லூரி கட்டிட அமைப்பு வேலை சம்பந்தமான பின்னேர வகுப்பில் 1 ம் வருடம் சித்தியடைந்தவர்களாக இருக்க வேண்டும்

அல்லது

கட்டிட அமைப்பு வேலைகளில் குறைந்தது 2 வருடங்கள் செய்கை முறை அனுபவம் உடையவர்களாக இருக்க வேண்டும்.

(7) படையினர் நுண்தொழில் எழுதுவினைஞர்கள்–இலங்கைப் பொறியியலாளர்கள் தொழிற் சேவைகள்

குறைந்தது கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சை சித்தியடைந்தவர்களாகவும், நிமிடத்தில் 15, 20 சொற்கள் தட்டெழுத்துத் தட்டக்கூடியவர்களாகவும், அரசாங்கப் பகுதியிலோ, அல்லது வர்த்தக ஸ்தாபனத்திலோ எழுதுவினைஞராக தொடர்ந்து 1 வருட அனுபவம் உடையவர்களாகவும் இருக்க வேண்டும்.

(உ) (1) கோப்ரல் எழுதுவினைஞர்–சுருக்குத் தட்டெழுத்தாளர் இலங்கை சேனை சேவைப் படை

25 வயதிற்கு உட்பட்டவர்களாகவும், ஆங்கில கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சை, அல்லது அதற்கு இணையான வேறு பரீட்சைகள் சித்தியடைந்தவர்களாகவும் இருக்க வேண்டும் ; (வர்த்தக பாடங்களுடன் சித்தியடைந்திருப்பது விரும்பத் தக்கது)

அல்லது

ஆங்கில கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சை வர்த்தக பாடங்களுடன் சித்தியடைந்தவர்களாகவும் ;

ஒரு திறமையான சுருக்குத் தட்டெழுத்தாளராக இருப்பதுடன் குறைந்தது கீழ்க் காணப்படுபவற்றில் ஒன்றையாவது உடையவராக இருக்க வேண்டும் —

(1) ஆங்கிலத்தில் ஒரு நிமிடத்தில் 80 சொற்கள் சுருக்கெழுத்து எழுதக்கூடியவர்களாகவும், 30 தொடக்கம் 40 சொற்கள் வரை தட்டெழுத்துத் தட்டக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும் ;

(2) சிங்களத்தில் ஒரு நிமிடத்தில் 60 சொற்கள் சுருக்கெழுத்து எழுதக் கூடியவர்களாகவும், 15 முதல் 25 சொற்கள் வரை தட்டெழுத்துத் தட்டக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும் ;

(3) கந்தோர் காரியக் கிரமங்களில் அனுபவம் உடையவர்களாகவும் இருக்க வேண்டும்.

(2) கோப்ரல் எழுதுவினைஞர் (பொதுவேலைகள்)–இலங்கைச் சேனை சேவைப் படை

19 வயதிற்கு மேற்பட்டு 25 வயதிற்கு உட்பட்டவர்களாகவும் ;

கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சை சிங்களத்துடன் சித்தியடைந்தவர்களாகவும் ;

சுருக்கெழுத்து எழுதுவதில் போதிய அறிவும், நிமிடத்தில் 30 சொற்கள் தட்டெழுத்துத் தட்டக்கூடியவர்களாகவும் இருக்க வேண்டும்.

(ஊ) படையினர் சப்பாத்து பழுதுபார்ப்பவர்–இலங்கைச் சேனை ஆயுத நிருவாகப் படை

ஆங்கிலம், சிங்களம், தமிழ் இவற்றுள் ஏதாவது ஒரு மொழியில் 7 ம் வகுப்புச் சித்தியடைந்தவர்களாகவும் ;

சப்பாத்துக்களின் தேய்ந்துபோன ஆணிகள், அடிப்பாகங்கள், குதிகால் ஆணிகள் ஆகியவைகளைச் சப்பாத்தின் நின்று எடுத்து திரும்பப் பொருத்தக்கூடியவர்களாகவும் ;

தேய்ந்துபோன சப்பாத்துக்களின் அடிப்பாகங்களைப் பிரித்துச் செப்பனிடக் கூடியவர்களாகவும் ;

சப்பாத்துக்களின் இடுப்புப் பக்கங்களை எடுத்துப் புதிய தோல் போட்டு ஒட்டக் கூடியவர்களாகவும் ;

படைவீரர்களின் சப்பாத்தின் குதிகால், குதிகால் ஆணிகள், சப்பாத்தின் முன்பாகம் ஆகியவைகள் பொருத்தக்கூடியவர்களாகவும் ;

நூலில் மெழுகு பூசி சப்பாத்தின் கிழிந்த மேற்புறத்தைச் தைக்கக்கூடியவர்களாகவும் ;

வெவ்வேறு வேலைகளுக்குத் தகுதியான பொருட்களைத் தேர்ந்தெடுக்கவும், பாவனைக்குதவாத சப்பாத்துக்களைத் தேர்ந்தெடுக்கக்கூடியவர்சளாகவும் இருக்க வேண்டும்.

(எ) (1) படையினர் கருவிகள் பழுதுபார்ப்பவர்கள்–இலங்கை மின்சார இயந்திர தொழில் பொறியியலாளர்கள்

30 வயதிற்கு உட்பட்ட விண்ணப்பதாரர்களுக்குச் சலுகை அளிக்கப்படும் ;

சிங்களம், ஆங்கிலம், தமிழ் இவற்றுள் ஏதாவது ஒரு மொழியில் கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சை சித்தியடைந்தவர்களாகவும் ;

தட்டச்சு இயந்திரம், கந்தோர் உபகரணங்கள் ஆகியவற்றைக் கையாள்வதிலும், பழுதுபார்ப்பதிலும் குறைந்தது 3 வருட அனுபவம் உடையவர்களாகவும் இருக்க வேண்டும் ;

தெரிவு செய்யப்படுவதற்கு முன்பு விண்ணப்பதார் ஒரு தேர்ச்சிப் பரீட்சை ஒன்றிற்குச் சமூகமளிக்கும்படி கேட்கப்படுவர்.

| | |
|---|---|
| (2) படையினர் எழுது வினைஞர்கள் (பொதுவேலைகள்) இலங்கை மின்சார இயந்திரத் தொழில் பொறியியலாளர்கள் | 30 வயதிற்கு உட்பட்ட விண்ணப்பதாரர்களுக்குச் சலுகை அளிக்கப்படும் ;<br>சிங்களம், ஆங்கிலம், தமிழ் இவற்றுள் ஏதாவது ஒரு மொழியில் கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சை சித்தியடைந்தவர்களாகவும் ;<br>பொதுவான கந்தோர் காரியக் கிரமங்களில் போதிய அறிவும், கடிதப் போக்குவரத்துக்களைச் செய்யக்கூடியவர்களாகவும், குறைந்தது 45 சொற்கள் ஒரு நிமிடத்தில் தட்டெழுத்துத் தட்டக்கூடியவர்களாகவும் இருக்கவேண்டும் ;<br>தெரிவு செய்யப்படுவதற்கு முன்பு விண்ணப்பதாரர் ஒரு தேர்ச்சிப் பரீட்சைக்கு சமூகமளிக்கும்படி கேட்கப்படுவர். |
| (3) படையினர் மின் மூலாமிடுபவர் – இலங்கை மின்சார இயந்திரத் தொழில் பொறியியலாளர்கள் | 30 வயதிற்கு உட்பட்ட விண்ணப்பதாரர்களுக்குச் சலுகை அளிக்கப்படும் ;<br>சிங்களம், ஆங்கிலம், தமிழ் இவற்றுள் ஏதாவது ஒரு மொழியில் கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சை சித்தியடைந்தவர்களாகவும் ;<br>மின்மூலாமிடும் தொழிலில் குறைந்தது 5 வருடங்கள் வேலை செய்து அனுபவம் உடையவர்களாகவும் இருக்கவேண்டும் ;<br>தெரிவு செய்யப்படுவதற்கு முன்பு விண்ணப்பதாரர் ஒரு தேர்ச்சிப் பரீட்சைக்குச் சமூகமளிக்கும்படி கேட்கப்படுவர். |
| (4) படையினர் வாகனம் சீர்படுத்துபவர்கள் – இலங்கை மின்சார இயந்திரத் தொழில் பொறியியலாளர்கள் | 30 வயதிற்கு உட்பட்ட விண்ணப்பதாரர்களுக்குச் சலுகை அளிக்கப்படும் ;<br>சிங்களம், ஆங்கிலம், தமிழ் இவற்றுள் ஏதாவது ஒரு மொழியில் கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சை சித்தியடைந்தவர்களாகவும் ;<br>குறிப்பிட்ட தொழிலில் குறைந்தது 3 வருடங்கள் செய்கைமுறை அனுபவம் உடையவர்களாகவும் இருக்க வேண்டும் ;<br>தெரிவு செய்யப்படுவதற்கு முன்பு விண்ணப்பதாரர் ஒரு தேர்ச்சிப் பரீட்சைக்குச் சமூகமளிக்கும்படி கேட்கப்படுவர். |
| (5) படையினர் கடைசற்காரர்—இலங்கை மின்சார இயந்திரத் தொழில் பொறியியலாளர்கள் | 30 வயதிற்கு உட்பட்ட விண்ணப்பதாரர்களுக்குச் சலுகை அளிக்கப்படும் ;<br>சிங்களம், ஆங்கிலம், தமிழ் இவற்றுள் ஏதாவது ஒருமொழியில் கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சை சித்தியடைந்தவர்களாகவும் ;<br>குறிப்பிட்ட தொழிலில் குறைந்தது 3 வருடங்கள் செய்கை முறை அனுபவம் உடையவர்களாகவும் இருக்க வேண்டும். அரைக்கும் இயந்திர வேலைகளில் செய்கைமுறை அனுபவம் உடையவர்களுக்குச் சலுகை அளிக்கப்படும் ;<br>தெரிவு செய்யப்படுவதற்கு முன்பு விண்ணப்பதாரர் ஒரு தேர்ச்சிப் பரீட்சைக்குச் சமூகமளிக்கும்படி கேட்கப்படுவர் ; |
| (6) படையினர் வாகனம் பழுதுபார்ப்பவர்கள் – இலங்கை மின்சார இயந்திரத் தொழில் பொறியியலாளர்கள் | 30 வயதிற்கு உட்பட்ட விண்ணப்பக்காரர்களுக்குச் சலுகை அளிக்கப்படும் ;<br>சிங்களம், ஆங்கிலம், தமிழ் இவற்றுள் ஏதாவது ஒரு மொழியில் கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சை சித்தியடைந்தவர்களாகவும் ;<br>குறிப்பிட்ட தொழிலில் குறைந்தது 3 வருடங்கள், ஒரு பிரக்யாதி பெற்ற வர்த்தக ஸ்தாபனத்திலோ, அல்லது மோட்டார் மடுவத்திலோ வேலை செய்து அனுபவம் உடையவர்களாகவும் இருக்க வேண்டும் ;<br>தெரிவு செய்யப்படுவதற்கு முன்பு விண்ணப்பதாரர் ஒரு தேர்ச்சிப் பரீட்சைக்குச் சமூகமளிக்கும்படி கேட்கப்படுவர். |
| (ஏ) (1) சார்ஜன் (கல்விப் போதனாசிரியர்கள்) இலங்கைச் சேனைப் பொது சேவைப் படை | பின்வரும் தராதரங்களில் குறைந்தது ஒன்றையாவது பெற்றவராக இருக்க வேண்டும்—<br>(1) பயிற்சி பெற்ற சிங்கள ஆசிரிய தராதரப் பத்திரம் பெற்றவர்களாக இருக்க வேண்டும் ;<br>(2) சிங்கள ஆசிரிய தராவரப் பத்திரம் பெற்றவர்களாக இருப்பதுடன், ஆங்கில சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் பெற்றவர்களாகவும் இருக்க வேண்டும் ;<br>(3) சிங்கள கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பத்திரம் பெற்றவர்களாக இருப்பதுடன், ஆங்கில சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது உயர்தர பாடசாலைத் தராதரப் பத்திரம் பெற்றவர்களாக இருக்க வேண்டும் ;<br>(4) ஆங்கில சிரேஷ்ட பாடசாலைத் தராதர பத்திரமும், சிங்கள சிரேஷ்ட பாடசாலைத் தராதரப்பத்திரமும் குறைந்தது நான்கு திறமையான சித்திகளுடன் சித்தி அடைந்தவர்களாக இருக்கவேண்டும் ;<br>சிங்கள சிரேஷ்ட வகுப்பிற்கு பொது விஞ்ஞானமும், கணிதமும் கற்பிக்கக் கூடிய விண்ணப்பக்காரர்களுக்கு சலுகையளிக்கப்படும் ;<br>கற்பிப்பதில் அனுபவம், விளையாட்டுக்கள் சம்பந்தமான ஏனைய தராதரங்கள் எல்லாம் முழு விபரங்களுடனும் கொடுக்கப்படல் வேண்டும் ;<br>இதுபற்றிய சான்றுப் பத்திரங்களின் மாதிரிப் பிரதிகள் அனுப்பப்படல் வேண்டும் ;<br>மொழிபெயர்ப்பாளர்களாகவும் பத்திரிகை நிருபர்களாகவும் கடமையாற்றி அனுபவம் உள்ள விண்ணப்பதாரர்களுக்குச் சலுகையளிக்கப்படும். |
| (2) படையினர் எழுதுவினைஞர்கள் (பொது வேலைகள்) இலங்கைச் சேனைப் பொது சேவைப் படை | சிங்கள கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் ஆங்கிலமும் ஒரு பாடமாகப் பெற்றவராக அல்லது ஆங்கில கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் பெற்றவராக இருக்கவேண்டும் ;<br>சிங்கள தட்டெழுத்தில் ஓரளவு அறிவும் அத்துடன் ஆங்கில தட்டெழுத்தும் தெரிந்திருத்தல், அல்லது ஆங்கில தட்டெழுத்து தட்டக்கூடியதாக இருத்தல் பிரத்தியேக தராதரமாகக் கணிக்கப்படும். |
| (ஐ) (1) லான்ஸ் கோப்ரல் மேளக் குழுவினர்—இலங்கைச் சேனைப் பொது சேவைப் படை | 25 வயதிற்கு உட்பட்டவர்களாகவும், 8 ம் வகுப்பு சித்தியடைந்தவர்களாகவும் ;<br>" காந்தர்வ சபா " வில் குறைந்தது முதலாம் வருடப் பரீட்சை சித்தியடைந்தவர்களாகவும் ;<br>பின்வரும் கருவிகளில் குறைந்தது இரண்டு கருவிகளை இயக்கக்கூடியவர்களாகவும் இருக்க வேண்டும்—<br>(அ) காற்று இசைக் கருவிகள்<br>(ஆ) நரம்பு வாத்தியக் கருவிகள் |

(2) படையினர்கள் மேள வாத்தியக் குழுவினர்–இலங்கைச் சேனைப் பொதுச் சேவைப் படை — 25 வயதிற்கு உட்பட்டவர்களாகவும், ஆகக் குறைந்தது 7 ம் வகுப்புத் தகுதி உடையவர்களாகவும் ;

மேளவாத்தியம் வாசிப்பதில் அறிவும், மேள வாத்தியத்தைத் திறமையாக வாசிக்கவும் தெரிந்தவர்களாகவும் இருக்க வேண்டும்.

(5) ஒரு படையினர் 12 வருட சேவையில் பதிவு செய்யப்படுவர். இதில் 5 வருட பூரண சேவையின் பின் 7 வருடங்கள் மேற்படையிலும் சேவை செய்யப்படலாம். பின் இராணுவத்தில் இருந்து விலக்கப்படலாம். ஒரு படைவீரர் 12 வருட பூரண சேவையின் பின் பிற காரணங்களால் மீண்டும் சேவை செய்ய அனுமதிக்கப்படலாம். இச் சேவைக்காலம் எல்லாவற்றினதும் மொத்தம் 32 வருடங்களாகும்.

(6) இலங்கை இராணுவ நிரந்தரப் படையில் போர்வீரராக நியமிக்கப்பட்டவர்களின் சம்பளம், வாழ்க்கைச் செலவுப்படி பற்றிய விபரங்கள் பின் வருமாறு

(அ) 31 நாட்கள் கொண்ட ஒரு மாதத்திற்குரிய சம்பளமும், வாழ்க்கைச் செலவுப் படியும் :

| | சம்பளம் | வாழ்க்கைச் செலவுப் படி | கூப்பன் படி | சலவைச் செலவு | விவாகப் படி | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| படையினர் :— | | | | | | |
| விவாகம் ஆகாதவர் | 46 50 | 27 90 | — | — | — | 74 40 |
| விவாகம் ஆனவர் | 46 50 | 27 90 | 79 67 | 3 99 | 25 00 | 183 06 |
| லான்ஸ் கோப்ரல் :— | | | | | | |
| விவாகம் ஆகாதவர் | 62 00 | 43 40 | — | — | — | 105 40 |
| விவாகம் ஆனவர் | 62 00 | 43 40 | 79 67 | 3 99 | 25 00 | 214 06 |
| கோப்ரல் :— | | | | | | |
| விவாகம் ஆகாதவர் | 93 00 | 49 60 | — | — | — | 142 60 |
| விவாகம் ஆனவர் | 93 00 | 49 60 | 79 67 | 3 99 | 25 00 | 251 26 |
| சார்ஜன் :— | | | | | | |
| விவாகம் ஆகாதவர் | 147 25 | 49 60 | — | — | — | 196 85 |
| விவாகம் ஆனவர் | 147 25 | 49 60 | 79 67 | 3 99 | 37 50 | 318 01 |
| ஸ்ராப் சார்ஜன் :— | | | | | | |
| விவாகம் ஆகாதவர் | 170 50 | 49 60 | — | — | — | 220 10 |
| விவாகம் ஆனவர் | 170 50 | 49 60 | 79 67 | 3 99 | 37 50 | 341 26 |
| வறண்ட் உத்தியோகத்தர் (2) :— | | | | | | |
| விவாகம் ஆகாதவர் | 186 00 | 49 60 | — | — | — | 235 60 |
| விவாகம் ஆனவர் | 186 00 | 49 60 | 79 67 | 3 99 | 40 00 | 359 26 |
| வறண்ட் உத்தியோகத்தர் (1) : — | | | | | | |
| விவாகம் ஆகாதவர் | 217 00 | 49 60 | — | — | — | 266 60 |
| விவாகம் ஆனவர் | 217 00 | 49 60 | 79 67 | 3 99 | 40 00 | 390 26 |

(ஆ) விவாகம் ஆகாதவர்கள் பாசறையில் வாசம் செய்வார்களேயானால் அவர்களுக்கு கூப்பன்படி, சலவைச் செலவு ஆகியவைகள் கொடுக்கப்படமாட்டாது.

(7) 1 ம் பந்தியில் தரப்பட்டுள்ள காலி ஸ்தானங்களுக்குரிய விண்ணப்பங்கள் பின்வரும் நிபந்தனைகளுக்குரியதாக இருக்க வேண்டும் :—

(அ) விண்ணப்பக்காரர் ஒவ்வொருவரும் விளம்பரத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டிருக்கும் விண்ணப்பப் பத்திரத்தைப் பார்த்துத் தங்கள் சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பங்களைத் தயார் செய்து அனுப்பவேண்டும் ;

(ஆ) விண்ணப்பப் பத்திரங்கள் 1960 ம் ஆண்டு புரட்டாசி மாதம் 30 ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக இக் காரியாலயத்தில் கிடைக்கும்படியாக, பட்டாளத்திற்கு ஆள்திரட்டும் காரியாலய அதிபர், சேனைத் தலைமை நிலையம், தபாற் பெட்டி இலக்கம் 553, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பப் பத்திரத்திலும், அதனை அனுப்பும் தபால் உறையின் மேலும் “ நிரந்தரப் படையில் சேரும் விண்ணப்பம் ” என்று எழுதப்படல் வேண்டும் ;

(இ) விண்ணப்பக்காரர் எந்தப் பிரிவில் சேர விரும்புகிறார் என்பதைக் கூறி, நியமனம் ஆகியவைகளைக் கவனித்து விண்ணப்பிக்கவேண்டும்;

(ஈ) விண்ணப்பத்துடன் இணைக்கப்படவேண்டிய சான்றுப் பத்திரங்கள் (மாதிரிப் பிரதிகள் மாத்திரம்)

(1) பிறப்புச் சான்றுப் பத்திரம், (ஒருவரின் பிறப்புப் பதிவு செய்யப்படாதவிடத்து) பிரதம பதிவு அதிகாரியால் கொடுக்கப்பட்ட விசேட வயதுச் சான்றுப் பத்திரம்.

(2) கூடுதலான கல்வித் தகுதியைக் காட்டும் சான்றுப் பத்திரம்.

(3) விண்ணப்பக்காரரின் நன்நடத்தையைக் காட்டுமுகமாக தகுதிவாய்ந்தவர்களால் கையொப்பமிடப்பட்ட 3 தற்போதைய நற் சான்றுப் பத்திரங்கள். விண்ணப்பக்காரர் ஏற்கனவே தொழிலில் இருப்பவரானுல் இவைகளில் ஒன்று தங்கள் நேர் அதிகாரியிடமிருந்து பெற்றதாக இருக்க வேண்டும்.

குறிப்பு.—மேற்கூறப்பட்ட சான்றுப் பத்திரங்களின் உண்மைப் பிரதிகளை விண்ணப்பக்காரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டால் மாத்திரம் அப்போது அவைகள் காட்டப்பட வேண்டும்.

விண்ணப்பத்துடன் உண்மைப் பிரதிகள் அனுப்பப்பட்டு அவைகள் காணுமற்போனுல் அதற்குப் பொறுப்பேற்கப்பட மாட்டாது.

(உ) அரசாங்க சேவையில் உள்ளவர்கள் தங்கள் விண்ணப்பங்களை தங்கள் காரியாலயத்து தலைமை அதிகாரிக்கூடாக அனுப்ப வேண்டும்;

(ஊ) மேற்கூறப்பட்ட தகுதிகளுக்கிணங்காத விண்ணப்பங்கள் எக்காரணங்கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது ;

(எ) விண்ணப்பங்கள் கிடைத்த, கிடையாதது பற்றி அறிவிக்கப்பட மாட்டாது ;

(ஏ) தகுதி உடைய விண்ணப்பக்காரர்களுக்கு நேர்முகப் பரீட்சைக்குரிய இடம், நேரம், திகதி ஆகியவைகள் பிற்பாடு அறிவிக்கப்படும். விண்ணப்பக்காரர் நேர்முகப் பரீட்சைக்கு வருவதற்கு செலவு கொடுக்கப்பட மாட்டாது. அவர்கள் தங்கள் சொந்தச் செலவிலேயே வந்து ஓர் இராணுவத் தெரிவுக் குழுவின் முன் ஆஜராக வேண்டும் ;

(ஐ) நேர்முகப் பரீட்சையும் அத்துடன் கூடிய மற்றைய பரீட்சைகளும் முடிந்த பின்னர் ஒவ்வொரு விண்ணப்பக்காரருக்கும் அவர்களை நியமனத்திற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தால் நியமனத்திற்குரிய திகதி, இடம் முதலியவைகள் பற்றி எழுத்துமூலம் அறிவிக்கப்படும் ;

(ஒ) 21 வயதிற்குட்பட்டவர்களை அவர்களின் பெற்றோர்களோ, அல்லது பாதுகாவலர்களோ தங்கள் சம்மதத்தை எழுத்துமூலம் தெரிவிததாலன்றிச் சேர்த்துக்கொள்ள முடியாது ;

(ஓ) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பக்காரர்கள் அரசாங்க மொழிக் கொள்கைச் சட்டத்திற்கிணங்க ஏற்கனவே உண்டாகிய, அல்லது இனி மேல் உண்டாக்கப்படும் எந்தச் சட்டத்திற்கும் அமைந்து நடக்க வேண்டும் ;

(ஔ) ஒரு விண்ணப்பக்காரரை யாராவது அங்கீகாரம் செய்ய விரும்பினால் அவருக்கு ஒரு நற்சான்றுப் பத்திரம் கொடுத்து உதவலாம். அப்படியல்லாது அவரை ஆதரிக்கவோ, பிரசாரம் செய்யவோ எத்தனித்தால் குறித்த விண்ணப்பக்காரரின் மனு தள்ளுபடியாவ தற்குக் காரணமாயிருந்தவராவார்.

(க) தெரிவின் பின் பிழையானவை என்று காணப்படின் அவைகள் எந்நேரத்திலும் தள்ளுபடி செய்யப்படலாம். சேர்க்கப்பட்ட பின் பிழையானவை என்று காணப்படின் இராணுவத்தில் இருந்து விலக்கப்படுவதுமல்லாமல் தண்டனைக்கும் உள்ளாவார்கள்.

சேனைத் தலைமை நிலையம்,
தபாற் பெட்டி இலக்கம் 553,
கொழும்பு, 1960 ம் ஆு புரட்டாசி மீ 12 ந் வ.

கே. ராஜயோகம், (மேஜர்),
படைத் தளபதிக்காக.

**மாதிரி விண்ணப்பப் பத்திரம்**

1. (அ) சாதாரண பெயர் : ————.
   (ஆ) வேறு பெயர்கள் (முழுவதும்) : ————.
   (இ) தபால் விலாசம் : ————.
2. அருகாமையில் உள்ள தபால்/தந்தி நிலையம் :————.
3. அருகாமையில் உள்ள பொலிஸ் நிலையம் : ————.
4. பிறந்த திகதி : ————.
   (பிறப்புச் சான்றுப் பத்திரப் பிரதி இணைக்கப்படல் வேண்டும்).
5. இனம் : ————.
6. சேர விரும்பும் பிரிவு : ————.
   (ஒன்றிற்கு மேற்பட்ட காலி ஸ்தானங்களுக்கு விண்ணப்பிப்போர் ஒவ்வொரு நியமனத்திற்கும் வெவ்வேறான விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டும்).
7. முதல் இராணுவத்தில் சேவை செய்திருந்தால் பிரிவும், திகதிகளும் : ————.
8. இராணுவம் (யுத்தகால சேவையுட்பட) கடற்படை, ஆகாயப்படை, சுயேச்சைப் படை ஆகிய பிரிவுகளில் சேவை செய்திருந்தால் பிரிவு, திகதிகள் ஆகியவற்றுடன் பூரண விபரம் தருக :————.
9. இராணுவத்தில் இருந்து விலகியதா ? அல்லது விலக்கப்பட்டவரா ? ————.
   (விலகிய அல்லது விலக்கப்பட்ட சான்றுப் பத்திரப் பிரதி இணைக்கப்படல் வேண்டும்).
10. சித்தியடைந்துள்ள பரீட்சைகள் ; பாடங்கள் திகதிகள் ஆகியவற்றுடன் : ————.
    (பாடசாலை விடுகைப் பத்திரப் பிரதி இணைக்கப்படல் வேண்டும்).
11. பாடசாலையை, அல்லது கல்லூரியை விட்ட பிற்பாடு செய்த தொழில் : ————.
12. வேறு தகுதிகள் இருப்பின் (விளையாட்டுக்கள் சம்பந்தமானவை உட்பட) : ————.
13. உயரம் : ————. அடி : ———— அங்குலம் : ————.
14. விளம்பரத்தின் 4 ம் பந்தியின்படி நீர் கூடுதலான தகுதி உடைய பிரிவில் சேர விரும்பினால் விசேட தகுதி, அனுபவம் ஆகியவற்றைக் காட்டுக : ————.
15. நற்சான்றுப் பத்திரங்கள் கொடுத்துதவியவர்களின் பெயர்களும், அவர்களின் தகுதிகளும் : ————.

    1 : ————.
    2 : ————.
    3 : ————.

16. விண்ணப்பக்காரர் கையொப்பமிடவேண்டிய சான்றுப் பத்திரம் : ————.

என்னால் கொடுக்கப்பட்டுள்ள விடைகளும், தகுதிகளும், எனது அறிவிற்கெட்டியவரையில் உண்மையானவைகள் என்று அத்தாட்சிப் படுத்துகிறேன்.

திகதி : ————.

————,
விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

9008

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## தபாற் தந்திப் பகுதி

### தபாற்கந்தோர்த் தலைவர் தந்தியாளர் நியமனப் பரீட்சை

1960 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 2 ந் திகதி வெளிவந்த 12,193 ம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானியின் 2 ம் பிரிவு (விளம்பரங்கள்) 1 ம் பகுதியில் பிரசுரிக்கப்பட்ட 1960 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 26 ந் திகதியிடப்பட்ட அறிவித்தலின் சார்பாக, வர்த்தமானி அறிவித்தலின் 5 ம் பந்தி (ஆ)—(ஈ) இல் விவரிக்கப்பட்ட சலுகைகளின் கீழ் இப் பரீட்சை எடுப்பதற்கு விண்ணப்பிக்கும் தபாற் தந்திப் பகுதி ஊழியர்கள், 1960 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 8 ந் திகதி குறித்த பந்தியில் கூறப்பட்ட குறைந்த சேவைக்காலத்தை முடித்திருக்க வேண்டும்.

எச். ஈ. செனிவிரத்தின,
தபாற் தந்தித் தலைமை அதிபதி.

பிரதம தபாற் கந்தோர்,
கொழும்பு 1,
1960 ம் ஆு செப்டம்பர் மீ 7 ந் வ.

9078

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## சுங்க இலாகா பீடி விற்பனவு

1960 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 4 ந் திகதி மத்தியானம் 12 மணிவரையும் கீழ்க்குறிக்கப்பட்ட பீடிகள் வாங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள் கொழும்பு திறைசேரி 270 ம் அறையிலிருக்கும் நிதிமந்திரி காரியாலயத்தைச் சேர்ந்த டெண்டர் போர்ட் அக்கிராசனரவர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

(அ) 90 மூடை ராம்சேட் சொக்கலால் பீடிகள்—ஒவ்வொன்றும் ஏறக்குறைய 32 றுத்தல் நிறையுள்ளதும் 24 பக்கெற்றுகள் கொண்டதும்.

(ஆ) 19 மூடை அதே பீடிகள் பின்வரும் நிறையுள்ளவை

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | மூடைகள் | ஒவ்வொன்றும் | 28 | றுத்தல். |
| 3 | ” | ” | 36 | ” |
| 2 | ” | ” | 26 | ” |
| 2 | ” | ” | 33 | ” |

| | | | | |
|---|---|---|---|---|
| 1 மூடை—28½ | றுத்தல் | ; 1 மூடை | 18½ | றுத்தல். |
| 1 ”—29½ | ” | ; 1 ” | 21½ | ” |
| 1 ”—28½ | ” | ; 1 ” | 19½ | ” |
| 1 ”—32½ | ” | ; 1 ” | 31 | ” |
| 1 ”—23½ | ” | ; 1 ” | 40½ | ” |

2. கேள்விப் பத்திரங்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு தாள்கள் அனுப்பப்பட வேண்டும். மாதிரிப் பத்திரங்கள் மட்டக்களப்பு டிஸ்திறிக் அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். மட்டக்களப்பு சுங்க காரியாலயத்தில் அல்லது கொழும்பு திறைசேரியில் அல்லது எந்தக் கச்சேரியிலாவது கேள்விப் பணமாக ரூபா 100/- கட்டிப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை மட்டக்களப்பு சுங்க கந்தோரில் சமர்ப்பித்து ரெண்டர் பத்திரங்கள் பெறவேண்டும்.

3. கேள்விப் பத்திரங்கள் மேலுறையின் இடது பக்கத்து மேல் மூலையில் "பீடிகளுக்குக் கேள்விப்பத்திரம்" என்று எழுதப்பட்டு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படுதற்கென நியமித்த நேரத்துக்கு முன் கொழும்பு, தபால் பெட்டி இலக்கம் 500, நிதிமந்திரி காரியாலயத்தைச் சேர்ந்த ரெண்டர் வோர்ட் அக்கிராசனர் என்ற விலாசத்திற்கு பதியப்பட்ட தபாலில் அனுப்பப்பட வேண்டும், அல்லது குறிப்பிட்ட கந்தோரில் அதற்கென வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் போடவேண்டும்.

4. பீடிகள் மட்டக்களப்பு சுங்கத்தலைவரின் காரியாலயத்தில் சாதாரண வேலை நேரங்களில் பார்வையிடப்படலாம்.

5. குறித்த நேரத்தில் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்போது கேள்விக்காரர் சமூகமளிக்க உத்தரவுண்டு.

6. ஏற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பகாரர் பீடிகளின் முழு விலையையும், பீடிக்கட்டுகளுக்கு சுங்க உத்தியோகஸ்தரால் முத்திரையிடும் செலவையும் செலுத்தியவுடனே பீடிகளை எடுக்கலாம்.

7. எல்லாக் கேள்விப்பத்திரங்களையும், அல்லது எப்பகுதியையேனும் ஏற்கவோ அன்றி நிராகரிக்கவோ, ரெண்டர் சபைக்கு முழு உரிமையுண்டு.

8. இதைப்பற்றி வேறு விபரங்கள் மட்டக்களப்பு சுங்க இலாகா அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ஆ. சிதம்பரப்பிள்ளை,
மட்டக்களப்பு சுங்க இலாகா அதிபருக்காக.

மட்டக்களப்பு,
1960 ம் ஆண்டு செப்டம்பர் மீ 9 ந் உ.
9044

## நீர்ப்பாசனத்துறை

கொழும்பு நீர்ப்பாசன உட்பிரிவின் கீழ் வத்தளையிலுள்ள முத்துராஜ வலைத் திட்டத்தில் பாலத்துடன் பொருந்திய மடைக்கதவு கட்டுவதற்கான கேள்விப்பத்திரங்கள், கொழும்பு 1, த.பெ. இல. 500, 335 ம் இலக்க அறையிலுள்ள விவசாய, நில, நீர்ப்பாசன, மின்சார அமைச்சின் கேள்விப்பத்திரச் சபைத் தலைவரால் 1960 ம் ஆண்டு ஐப்பசி மீ 18 ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

ரூபா 100,000 க்கு அல்லது அதற்குமேலும், நீர்ப்பாசன, புகையிரத, அல்லது பொது மராமத்து பகுதிகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே மேற்கூறிய கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கத் தகுதியுடையோராவர். கொழும்பு 8, கொட்டா வீதியிலுள்ள மேற்குப் பகுதி, பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலகத்திலே பெறப்படும் இரு பிரதிகளைக் கொண்ட கேள்விப்பத்திரங்களில் விண்ணப்பிக்க வேண்டும். நீர்ப்பாசனத்துறை அதிபரிடமேனும், அல்லது எந்த வெளியூர் கச்சேரியிலேனும் ரூபா 250 கட்டுப்பணமாகக் கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்துக் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். 1960 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 14 ம் திகதி வெள்ளிக்கிழமை வரைக்கும் அலுவலக நேரங்களில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். ஏனைய விபரங்களை மேற்கூறிய பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பா. செல்லகேவ,
நீர்ப்பாசனத்துறை அதிபருக்காக.

கொழும்பு,
9036

## நீர்ப்பாசனத்துறை

கொழும்பு 8, கொட்டா ரோட்டில் உள்ள மேற்குப் பகுதிக்கு பொறுப்பான பொறியியலாளர், 1960 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 11 ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 11.30 மணி வரைக்கும் (1) போகப்பிட்டியா, வெம்முல்லை ஆகிய அணைக்கட்டுகளின் திருத்தவேலைக்கும் (2) இகலகொட்டிக்கும்புற அணைக்கட்டுத் திருத்த வேலைக்கும் முறையே ரூபா 7,000 க்கும் ரூபா 6,000 இக்காரியாலயத்தில் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடம் இருந்து முத்திரை இட்ட கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்வார்.

கம்பகா, அத்தனகலு ஓயாதிட்ட நீர்ப்பாசன அதிகாரியிடம் இருந்து பெறக்கூடிய கேள்விப்பத்திரங்களில் இணைப்பிரதிகள் மூலம் விண்ணப்பிக்கவேண்டும். இவரிடம் இவ்வேலைகளுக்குரிய படங்களைப் பார்க்கவும், மற்றும் விபரங்களையும் அறிந்து கொள்ளமுடியும்.

கேள்விப்பத்திரங்கள் 23-9-60 இல் இருந்து 7-10-60 வரைக்கும் அலுவலக நேரத்தில் தகுதி வாய்ந்தவர்கள் என அத்தாட்சிப்படுத்தும் ஒப்பந்தக்காரர்கள் இந்தக் கந்தோரிலோ அல்லது கச்சேரியிலோ கட்டுப் பணம் கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டைக் காண்பித்து விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பிப்போர் தற்பொழுது அரசாங்கத்தில் வேறுவேலைகளுக்கு ஒப்பந்தமுடையவராய் இருப்பின், அவ்வேலைகள் திருப்திகரமாக நடைபெறுகின்றனவென பொறுப்பான அதிகாரிகளிடம் இருந்து பெற்ற அத்தாட்சிப்பத்திரங்களையும் கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும் போது சமர்ப்பித்தல் வேண்டும்.

எவ்வித கேள்வியும் இன்றி, கேள்விப்பத்திரங்களை முற்றுகவோ, அல்லது ஒரு பகுதியையோ நிராகரிப்பதற்கும் அல்லது ஏற்றுக்கொள்வதற்கும் அரசாங்கத்துக்கு உரிமை உண்டு.

ரி. எல். எம். பாலதாசா,
உட்பிரிவு நீர்ப்பாசன அதிகாரி.

நீர்ப்பாசனக் காரியாலயம்,
கம்பகா,
1960 ம் ஆண்டு செப்ரெம்பர் மீ 2 ந் உ.
9047

## நீர்ப்பாசன இலாகா

குருளுவேவாப் பகுதியிலுள்ள குயிலகட குளத்திட்டத்திலுள்ள கீழ்க்காணும் வேலைகளைச் செய்வதற்கு, வெவ்வேறு கேள்விகள், 1960 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 8 ம் திகதி சனிக்கிழமை காலை 10 மணி வரைக்கும், பெரும்பாக நீர்ப்பாசன எஞ்சினியர், வடமத்திய மாகாணம், அனுராதபுரம் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) 100′ மதவோடு கூடிய வான் கட்டுதல்.

(ii) இரண்டு 40 அடி மதவோடு கூடிய வான் கட்டுதல்.

(iii) ஒரு 33 அடி மதவோடு கூடிய வான் கட்டுதல்.

(iv) குருளுவேவா வலது பிரதான வாய்க்கால் ஊடாக ஒரு பாலம் கட்டுதல்.

(v) ஒரு 150 அடி வான் கட்டுதல்.

(vi) 3 அடியுள்ள கியூம் பைப் கொன்டியூற் 200 அடி நீளம்.

ரூபா 15,000/- அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கோ இவ் விலாகாவில் பதிவு செய்யப்பட்டும், ஏதும் ஒரு கச்சேரியிலோ, அல்லது பீகொடவெவாவிலுள்ள குருளுவேவா உபநீர்ப்பாசன பகுதிக் காரியாலயத்திலோ ரூபா 25/- ஒவ்வொன்றுக்கும் கட்டியதற்கு ஆதாரமாகப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டைச் சமர்ப்பிக்கும் ஒப்பந்தக்காரர்களுக்கு மாத்திரமே கேள்விப் பத்திரங்கள் 12.9.60 தொடக்கம் 6.10.60 பிற்பகல் 4.30 மணி வரையும் வழங்கப்படும்.

குருளுவேவா உபபிரிவு நீர்ப்பாசன அதிகாரியிடம் பெறக்கூடிய கேள்விப் பத்திரங்கள், இரு பிரதிகளாகச் சமர்ப்பித்தல் வேண்டும். ஏனைய விபரங்கள், இவ்வுத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

எ. எவ். மஹாகமகே,
உப பகுதி நீர்ப்பாசன அதிகாரி, குருளுவேவா

பீகொடவேவா,
1960 ம் ஆண்டு செப்ரெம்பர் மீ 3 ந் உ.
8834

## நீர்ப்பாசன இலாகா

வடமத்திய மாகாண பெரும்பகுதி நீர்ப்பாசனப் பொறியியலாளர் அவர்களால் அநுராதபுர உபபகுதி வேலைத்தலங்களுக்கு, 1960/61 நிதி வருடத்தில், பொருட்கள் ஏற்றிச் செல்லுதற்கும் கிடுகு கொடுப்பதற்கும் ஆகிய கேள்விப்பத்திரங்கள் 1960 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 28 ந் தேதி காலை 10 மணிவரை நீர்ப்பாசன இலாகாவில் முறையே ரூ. 20,000, ரூ. 10,000 க்கும் மேலேயும் பதிவு செய்யப்பட்ட கொந்தருத்துக்காரர்களிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படும்.

கச்சேரியில் ரூபா 25 கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டைச் சமர்ப்பிக்கும் பதிவு செய்யப்பட்ட கொந்தருத்துக்காரர்களுக்கு மாத்திரம் கேள்விப் பத்திரங்கள் கொடுக்கப்படும்.

கேள்விப்பத்திரங்கள் அநுராதபுர உபபகுதி நீர்ப்பாசன பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். வேலை விபரங்கள் அவரிடமிருந்து அறிந்து கொள்ளவேண்டும்.

9059

## நீர்ப்பாசன இலாகா

மட்டக்களப்பிலுள்ள கிழக்குப் பிரிவின் பெரும்பாக நீர்ப்பாசனக் கந்தோரையும், பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர் வசிக்கும் வீட்டையும் வெள்ளத்தடையினின்று உயர்த்திக் கட்டுவதற்கு நீர்ப்பாசனப் பகுதியில் ரூபா 25,000 க்கு அல்லது அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் 1960 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 5 ம் திகதி காலை 9.30 மணிவரைக்கும் மட்டக்களப்பு கிழக்குப் பிரிவிலுள்ள பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. இரு பிரதி கொண்ட வெற்றுக் கேள்விப் பத்திரங்கள் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த செங்கலடியிலுள்ள உறுகாம நீர்ப்பாசன உப பிரிவின் நீர்ப்பாசனப் பொறியியலாளர் அவர்களிடமிருந்து 1960 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 4 ந் திகதி வரைக்கும் பெற்றுக்கொள்ளலாம். 1960 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 5 ந் திகதி காலை 10 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் பார்வையிடப்படும். அச்சமயம் கேள்விப்பத்திரக்காரர்கள் விரும்பினால் பிரசன்னமாயிருக்கலாம். கொழும்பு நீர்ப்பாசன அதிபரின் பெயரில் ரூபா 25 க்குப் பெறுமதியான காசுக்கட்டளையை அல்லது பற்றுச்சீட்டைச் சமர்ப்பிக்கும் ஒப்பந்தக்காரர்களுக்கு மட்டுமே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

3. மேற்கொண்டு விபரங்களை கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த செங்கலடியிலுள்ள உறுகாம நீர்ப்பாசனப் பொறியியலாளர் அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

சி. ஜெயசிங்,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
உறுகாம உப பகுதி.

நீர்ப்பாசன அலுவலகம்,
செங்கலடி, கி.மா.
1960 ம் ஆண்டு புரட்டாதி மீ 6 ந் வ.

9043

---

## உணவுப் பகுதி

1960 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 1 ந் திகதி தொடக்கம், 1961 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30 ந் திகதி வரையுமுள்ள காலத்தில் வியாங்கொடை உணவுக்கட்டுப்பாட்டுப் பண்டசாலை வளவிலுள்ள தென்னை மரங்களைக் குத்தகைக்குக் கொடுப்பதற்கான கோரிக்கைகள், 1960 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 29 ந் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணி வரை, கொழும்பு, யூனியன் பிளேஸ், 330 ம் இலக்கத்திலுள்ள உணவு அதிகாரியால் ஏற்றுக்கொள்ளப்படும்.

1960 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 29 ந் திகதி நண்பகல் 12 மணி வரைக்கும் கொழும்பு, யூனியன் பிளேஸ், 330 ம் இலக்கத்திலுள்ள உணவு அதிகாரியின் காரியாலயத்தில் பெறக்கூடிய விண்ணப்பப் பத்திரத்தில் (இரு பிரதிகளில்) விண்ணப்பம் செய்யப்பட வேண்டும். உணவு அதிகாரியிடம் தங்குபணமாக ரூபா 25/- கொடுத்துப் பெற்ற பற்றுச் சீட்டைக் காண்பித்துக் கோரிக்கைப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம். மற்றும் தேவையான விபரங்கள் உணவு அதிகாரியின் காரியாலயத்திலிருந்து அறிந்துகொள்ளலாம்.

கே. எம். டி. ஜயனெத்தி,
உணவு அதிகாரி.

330, யூனியன் பிளேஸ்,
கொழும்பு,
1960 ம் ஆண்டு செப்ரெம்பர் மீ 7 ந் வ.

8926

---

## தபாற் தந்திப் பகுதி

### குழிவெட்டுவதற்கும் திரும்ப நிரப்புவதற்குமான கேள்விப்பத்திரங்கள்

கீழ்க்காணும் இடங்களில் குழிகளை வெட்டுவதற்கும், இப்பகுதிப் பதவியினரால் குழாய்கள் வைக்கப்பட்டபின்னர், அக்குழிகளை திரும்ப நிரப்புவதற்குமான கேள்விப்பத்திரங்கள் 1960 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 6 ந் திகதி காலை 9.30 வரை கொழும்பு மத்திய தந்திக் கந்தோர், தந்தி தெலிபோன் பிரதான இஞ்சினியரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

களனி புகையிரத நிலைய வீதியிலுள்ள தன்னியக்கத் தெலிபோன் மாற்று நிலையத்திலிருந்து கிரிபத்கொடை வீடமைப்புத் திட்டத்துக்கு சுமார் 4,400 யார் தூரத்திற்கு.

கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் கொழும்பு மத்திய தந்திக் கந்தோர், தந்தி தெலிபோன் பிரதான இஞ்சினியரிடமிருந்து பெற்ற பத்திரங்களில் (இரட்டைப் பிரதிகளில்) அனுப்பப்படல் வேண்டும். கொழும்பு, மத்திய தந்திக் கந்தோர் தந்திக் காசாளரிடம் அல்லது வெளியிடமாயின் அத்தபாற் கந்தோர்த் தலைவரிடம், கேள்விப்பத்திர பொறுப்புப் பணமாக ரூபா 100 கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டைச் சமர்ப்பிப்பவர்களுக்கே கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் வழங்கப்படும்.

கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் 1960 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 5 ந் திகதி 4 மணி வரை வழங்கப்படும்.

ஒப்பந்தத்தை முறைப்படி நிறைவேற்ற இரண்டு ஒப்பந்தங்களைப் பெறுவதற்காக் இரண்டு உத்தரவாதிகளைத் தமது செலவிலேயே தருவதற்கு, தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திர விண்ணப்பதாரர், தேவையானபோது வேண்டப்படுவர்.

ஒப்பந்தத்தை முறைப்படி நிறைவேற்றுவதற்காக, தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர், கேள்விப்பத்திர மதிப்பின் 5 வீதத் தொகையை தபாற் தந்தித் தலைமை அதிபதியிடம் காசாக பிணைப்பணம் கட்ட வேண்டப்படுவதுடன், ஒப்பந்தத்திற் சேரும்போது, உடன்படிக்கையில் முத்திரைச் சட்டப்படி, முத்திரைகளை ஒட்டவும் கடமைப்பட்டவராவர்.

கேள்விப்பத்திர முடிவு திகதியிலிருந்து குறைந்தது பதினைந்து (15) நாட்கள்வரை கேள்விப்பத்திரங்கள் ஒப்புக் கொள்ளுவதற்குத் தகுதியானவையாக இருக்கவேண்டும்.

1960 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 6 ந் திகதி காலை 10 மணிக்கு தந்தி தெலிபோன் பிரதான இஞ்சினியர் காரியாலயத்தில், கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்பொழுது கேள்விப்பத்திர விண்ணப்பதாரர்கள் சமூகமளிக்கலாம்.

எச். ஈ. செனவிரத்ன,
தபாற் தந்தி தலைமை அதிபதி.

பிரதம தபாற் கந்தோர்,
கொழும்பு 1,
1960 ம் ஆண்டு செப்ரெம்பர் மீ 6 ந் வ.

9076

---

### கட்டுநாயகா ஆகாய விமானப்படைத்தளத்தில் உள்ள தேங்காய் விற்பனவு

கட்டுநாயக ஆகாய விமானப்படைத்தள காணியில் பிடுங்கப்பட்ட சுமார் 172,000 தேங்காய்கள் விற்பனைக்கு வேண்டிய கேள்விப்பத்திரங்கள் கொழும்புக் கச்சேரி அரசாங்க அதிபரால் 1960 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 30 ந் திகதி வெள்ளிக்கிழமை பகல் 12 மணி வரை கொழும்புக் கச்சேரியில் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்வி அனுப்புபவர் பிடுங்கிய முழுக் காய்களையும் வாங்கவேண்டும். கேள்விப்பத்திரத்தில் 1000 காய்களுக்கென்ன வீத மென்பது காட்டப்படவேண்டும்.

2. கொழும்புக் கச்சேரியில் பெற்றுக்கொள்ளும் மாதிரிப் பத்திரங்களில் தான் கேள்விகள் அனுப்பவேண்டும். ஒப்பந்தக் கேள்விகள் இரு பிரதிகளில் மெழுகச் சிட்டு கேள்விக்காரரின் கையெழுத்திடப்பட்டு அரசாங்க அதிபர், கொழும்புக் கச்சேரி என மேல்விலாசம் இடப்படல் வேண்டும். ஒப்பந்தக்கேள்வி கொண்ட உறைகளில் அவற்றின் இடது பக்கத்தில் கட்டுநாயகா ஆகாயவிமானப் படைத்தளத்தில் உள்ள தேங்காய் வாங்குவதுபற்றிய ஒப்பந்தக் கேள்வி என எழுதி அனுப்பப்படல் வேண்டும்.

3. கேள்விப் பத்திரங்கள் கடைசித்திகதி காலை 11 மணி வரைக்கும் ரூபா 100 கட்டப்பட்ட பற்றுச்சீட்டைக் காட்டிய பின்தான் வழங்கப்படும். கட்டுப்பணம் கொழும்புக் கச்சேரியில் கட்டப்படல் வேண்டும். எவருடைய கேள்விப்பத்திரம் ஏற்கப்பட்டதோ அவரது கேள்வி ஏற்றுக் கொள்ளப்பட்டதென அறிவிக்கும் கடிதம் கிடைத்து பத்து (10) நாட்களுக்குள் முழுத் தொகையையும் கட்டித் தேங்காய்களை எடுத்துச் செல்லவேண்டும். அப்படிச் செய்யத்தவறின் அவருடைய கட்டுப்பணம் பறிமுதல் செய்யப்பட்டு அவரது பெயரைத் தவறுன கேள்விக்காரர் என்னும் இடாப்பில் சேர்க்கவேண்டிவரும். அரசாங்கம் அவரிடம் வைத்துள்ள வேறு எந்தத் தொடர்புக்காவது இரக்கம் காட்டமுடியாது.

4. பதிவு செய்த தபாலில் அரசாங்க அதிபர், கொழும்பு என்னும் விலாசத்திற்கு கேள்விப்பத்திரம் அனுப்பல்வேண்டும், அல்லது இதற்கென கொழும்புக் கச்சேரியில் வைக்கப்பட்ட பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்விக்காரர் பெயரும் விலாசமும் உறையில் குறிக்கப்படல் வேண்டும்.

5 விரும்பினால் கேள்விப்பத்திரம் உடைக்கப்படும் நேரத்தில் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படும். கொழும்புக் கச்சேரியில் கேள்விப்பத்திரம் யாவும் 1960 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 30 ந் திகதி பகல் 12 மணிக்குத் திறக்கப்படும்.

6. அதற்கெனக் கொடுக்கப்படும் பாரத்தின்படி இல்லாது அதன்படி சொல்லப்பட்ட நிபந்தனைக் கடங்காத கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கட்டுப்பணம் கட்டிய பற்றுச்சீட்டுத்துண்டு இல்லாத கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மையினாலேயே தெளிவாக கேள்வியின் விகிதம் தொகை முதலியவற்றை எழுத வேண்டும். திருத்தம் ஏதாகிலும் உண்டாயின் அவற்றைக் கேள்விக்காரரின் சுருக்குக் கையெழுத்திட்டு உறுதிபண்ணல் வேண்டும்.

7. கேள்விக்காரர் தங்கள் முழு விலாசத்தையும் மாதிரிப் பத்திரத்தில் கொட்டை எழுத்துக்களில் எழுதவேண்டும்.

8. கேள்விக்காரர் ரெண்டர்ப் பத்திரம் யாவும் மூடப்படும் திகதியில் இருந்து 3 கிழமை வரைக்கும் தங்கள் கேள்விகளை அனுமதிக்கப்படும் வரை காத்திருக்கவேண்டும்.

9. கொழும்பு அரசாங்க அதிபர் எந்தக் கேள்விப் பத்திரத்தையும் மறுக்கவோ அல்லது எதிலும் ஓர் பகுதியை ஏற்கவோ உரிமையுடையவராவர்.

10. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் தன் வேலைகளைச் செய்விப்பதற்கு இலங்கைத் தொழிலாளரை மாத்திரம் உபயோகிக்கவேண்டும். இலங்கையாளர் என்பதை இலங்கைப் பிரஜையானவர் அல்லது பதிவு செய்யப்பட்ட பிரஜை எனவே கருதல் வேண்டும்.

11. கேள்விக்காரருக்கு விடப்படும் அறிவித்தல் பத்திரங்கள் யாவும் அவருக்கு நேரிலேயே வழங்கப்பட்டோ அல்லது அவரால் கொடுக்கப்பட்ட விலாசத்திற்கே தபால் மூலம் அனுப்பப்பட்டு இருந்தால் அவருக்கு அவற்றை வழங்கியதாகவே கருதல் வேண்டும்.

12. கேள்விப்பத்திரக்காரர் தன் கீழ்உள்ள சிப்பந்தியாருக்கு, அவர் கோரும் நட்டம் எதையும் 1934 ம் ஆண்டின் 19 ம் இலக்கத் தொழிலாளர் நட்டஈடு ஆஞ்ஞைப்படி அத்தியாயம் 117 ம் நட்டம் கட்ட வேண்டும்.

13. அரசாங்கத்திற்கு திருப்தியில்லாத எந்த வேலையாளையோ அல்லது வேறு ஆட்களையோ வைத்து வேலை செய்விக்கத் தடுப்புக் கூறுவதற்கு அரசாங்கம் உரிமை உடையது.

14. அரசாங்கத்தினரால் தவறான கேள்வி ஒப்பந்தக்காரர் என்னும் இடாப்பில் சேர்க்கப்பட்டவரேனும் அல்லது போதிய காரணங்களால் ஒப்பந்தம் பண்ணப்படாதென அரசாங்க அதிபருக்குத் தோற்றுபவரோடும் ஒப்பந்தம் எழுதப்படமாட்டாது.

15. தேங்காய்களைத் தெரிந்து எடுக்காது காசைக் கட்டி அப்புறப்படுத்தல் வேண்டும்.

16. மற்றும் மேற்படி தகவல்களைக் கொழும்புக் கச்சேரி, அரசாங்க அதிபர் அல்லது பிரிவுக் காரியாதிகாரி, நீர்கொழும்பு என்போருக்கு மனுச்செய்து பெற்றுக்கொள்ளவும்.

ஜி. பி. தம்பையா,
அரசாங்க அதிபர்,
கொழும்பு மாவட்டம்.

கொழும்புக் கச்சேரி,
1960 ம் ஆண்டு செப்டெம்பர் மீ 12 ந் உ.

9065

---

## ஒப்பந்தக் கேள்விப்பத்திர அறிவித்தல்

### மொனருகலை மாவட்டத்திலுள்ள குடியேற்றப் பிரதேசங்களுக்கு வாழைக் கன்றுகள் கொடுப்பதற்கு ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்கள்

காணிக் கொமிஷனர் காரியாலயம், தபாற் பெட்டி 500, கொழும்பு என்னும் விலாசத்தில் இருக்கும் ஒப்பந்தக் கேள்விப்பத்திர சபைத் தலைவர், கீழே கொடுக்கப்பட்ட முறையில் உள்ளபடி, குடியேற்றப் பிரதேசங்களுக்கு " கோழிக்கூட்டு ", " புளி " சாதி வாழைக் கன்றுகள் கொடுப்பதற்காக 7.10.60 பிற்பகல் 2.30 வரை ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்வார். ஒவ்வொரு பிரதேசத்திற்கும் கொடுக்க வேண்டிய கன்றுகளின் தொகை கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்விப்பத்திரகாரர் பிரதேசங்களுக்கு கன்றுகளைக் கொண்டு போய் கொடுக்க வேண்டும்.

பொது திறைசேரியில் அல்லது இலங்கையில் எந்தக் கச்சேரியிலாவது ரூபா 25/- கட்டியதாக உத்தரவுச்சீட்டு சமர்ப்பித்து, 3.10.60 பிற்பகல் 3 மணி வரை, மொனருகலை மாவட்ட அதிபரிடமிருந்து பெற்றுக் கொள்ளும் கேள்விப்பத்திரங்களிலேயே ஒப்பந்தக் கேள்விகள் கேட்கலாம்.

ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்கள் சீல்வைத்த உறைகளில் " வாழைக் கன்றுகளுக்கு கேள்விப்பத்திரம், மொனருகலை மாவட்டம் " என எழுதி, தலைவர், கேள்விப்பத்திர சபை, இடம், கொமிஷனர் காரியாலயம், கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும். ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்கள் பதிவு செய்த காகிதமூலம் அனுப்பப்படலாம், அல்லது 320, 3 ம் வாடி, காலிமுகம், செக்ரடேரியட் என்ற விலாசத்தி லுள்ள கேள்விப் பத்திரப் பெட்டியில் போடலாம்.

**நிபந்தனைகள்**

(1) ஒப்பந்தக் கேள்விப்பத்திர சபையின் தலைவருக்கு, பத்திரங்கள் அனைத்தையும் அல்லது எதனையும் ஏற்கும் அல்லது ஏற்க மறுக்கும் உரித்து உள்ளது.

(2) நாட்டும் இடத்திலிருந்து பங்கிடும் இடத்திற்குக் கொண்டுபோகும் தொகை என்னது என மொனருகலை மாவட்ட அதிபர் தீர்மானிப்பார்.

(3) கொடுக்கும் இடத்திலிருந்து பங்கிடும் இடத்திற்குக் கொண்டு போகும் தொகையைக் கொண்டுபோகும் காலத்தில் மொனருகலை மாவட்ட அதிபர் தீர்மானிப்பார்.

(4) தெரிவு செய்த ஒப்பந்தக்காரர், மொனருகலை மாவட்ட அதிபர் அல்லது அவர் உத்தரவு பெற்றவர் கொடுக்கும் ஒரு கிழமை அவதானத் திற்குள் கன்றுகளை கொடுக்குமிடத்திலிருந்து வேண்டிய இடத்திற்குக் கொண்டு போக வேண்டும் என்று ஒப்பந்தக்காரருக்கு பதிவு செய்த காகிதமூலம் அறிவிக்கப்படும்.

(5) கொண்டுபோக கேள்விக்காரர் கேட்கும் பணத்தொகையில், வாகனத்தில் ஏற்றுவது இறக்குவது போன்ற எல்லாம் பொருந்தியிருக்க வேண்டும்.

(6) ஏற்றுவது இறக்குவது எல்லாம் மாவட்டவதிபருடைய உத்தியோகத்தர்கள் சொல்வது போலவே செய்ய வேண்டும்.

(7) தெரிவுசெய்த கேள்விக்காரர் கன்றுகளைப் பத்திரமாகக் கொண்டு போவதற்கு உத்தரவாதமாக இருக்க வேண்டும்.

(8) மாவட்ட அதிபரால் தேர்ந்தெடுக்கப்பட்ட வாழைக் கன்றுகள் மட்டும் கொண்டுபோகப்படும். உத்தரவு பெற்ற உத்தியோகத்தரின் தீர்ப்புக்கு மாறாக ஒரு விதமான அப்பீலும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(9) தேவைப்பட்டால் கன்றுகளை நாட்ட இடத்திலிருந்து எடுப்பது மாவட்ட அதிபரால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் முன்னிலையில் செய்யப்பட வேண்டும்.

(10) ஒவ்வொரு கன்றிலும் வேரிலிருந்து 12" தண்டு இருக்க வேண்டும்.

(11) ஒப்பந்தக் கேள்விப்பத்திரத்தின் பின்புறத்தில் கன்றுகள் பிடுங்கப்படும் சரியான இடம் கொடுக்கப்பட வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் ஏதேனும் ஒரு சாதிக் கன்றுக்குக் கொடுக்கப்படலாம்.

(கீழே கொடுக்கப்படும் தொகை சுமாராகக் கொடுக்கப்படும் தொகை)

| | குடியேற்றப் பிரதேசம் | | புளி வாழை | | கோழிக்கூட்டு |
|---|---|---|---|---|---|
| 1. | எற்றிமோலை | .. | 9,100 | .. | —— |
| 2. | மாகந்தன ஓயா .. | .. | 7,280 | .. | 7,280 |
| 3. | ஹுலந்தாவ எல்.பி. II | .. | 6,440 | .. | 6,440 |
| 4. | ஹுலந்தாவ எல்.பி. III | .. | 1,400 | .. | 1,400 |
| 5. | ஹுலந்தாவ எல்.பி. IV | .. | 4,480 | .. | 4,480 |
| 6. | ஹுலந்தாவ ஆர்.பி. I | .. | 10,500 | .. | 10,500 |
| | | | 39,200 | .. | 30,100 |

வி. பி. சில்வா,
மொனருகலை மாவட்ட அதிபருக்காக,

மொனருகலை கச்சேரி,
1960 ம் ஆண்டு செப்டம்பர் மீ 8 ந் உ.

9045

---

### பாவிக்க முடியாத டீசல் லொறிகள் விற்பனைக்கான கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாணக் கச்சேரி

யாழ்ப்பாணக் கச்சேரியில் இருக்கும் பின்வரும் லொறிகளை வாங்குவதற்கும் அங்கிருந்து வெளியே கொண்டு செல்லுவதற்குமான கேள்விப் பத்திரங்கள் 1960 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 24 ந் திகதி திங்கட்கிழமை காலை 11.30 மணி வரை யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**லொறிகள் : ஐசி 1168, ஐசி 1107, ஐசி 1177.**

யாழ்ப்பாண மாவட்டக் கச்சேரியில் பெற்றுக்கொள்ளக்கூடிய பத்திரங்களில் இரு பிரதிகளில் கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் 1960 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 21 ந் திகதி வெள்ளிக்கிழமை வரை கொடுக்கப்படும். ஒவ்வொரு லொறிக்கும் கேள்விப் பத்திரப் பணமாக ரூபா 100 (நூறு ரூபா) யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரிடமோ அல்லது வேறு எந்தக் கச்சேரியிலோ செலுத்தி பத்திரங்கள் வாங்குமுன்பு இப்பணத்திற்கான பற்றுச்சீட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் சீல் இடப்பட்ட காகித உறைகளில் வைக்கப்பட வேண்டும். காகித உறைகளின் இடதுபக்க மேற்கோணத்தில் " பாவிக்க முடியாத டீசல் லொறிகள் விற்பனவு—யாழ்ப்பாணக் கச்சேரி " என்று குறிப்பிடப்படல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் 1960 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 24 ந் திகதி திங்கட்கிழமை மத்தியானம் 12 மணிக்கு யாழ்ப்பாண மாவட்டக் கச்சேரியில் திறக்கப்படும். அத்தருணம் கேள்வியாளர்கள் சமுகம் கொடுக்க அனுமதிக்கப்படுவார்கள்.

யாழ்ப்பாண மாவட்டக் கச்சேரியில் சனிக்கிழமையைத் தவிர்ந்த ஏனைய காரியாலய நாட்களில் காலை 10 மணிக்கும் மாலை 3 மணிக்கும் இடையில் லொறிகளைப் பார்வையிடலாம்.

மேலதிகமான விபரங்கள் யாழ்ப்பாண மாவட்ட அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

எம். ஸ்ரீ காந்தா,
யாழ்ப்பாண மாவட்ட அதிபர்.

கச்சேரி,
யாழ்ப்பாணம்,
1960 ம் ஆ செப்டெம்பர் மீ 9 ந் உ.
9058

# பொருட்கள் விற்பனையும், பிறவும்

## ஏல விற்பனை—உபயோகமற்ற சாமான்கள்

### வளி மண்டல ஆய்வுப் பகுதி

உபயோகமற்ற சாமான்களின் ஏலவிற்பனையொன்று மேற் கூறிய கந்தோரில் 29.9.60 காலை 10 மணியளவில் நடைபெறும். மேற் கூறப்பட்ட சாமான்களை அக் கந்தோரில் வேலை நேரத்தில் பார்வையிடலாம். விற்பனை செய்யப்பட்ட சாமான்களுக்கு உடன் பணம் கொடுக்கப்படவேண்டும். விற்பனைத் திகதியன்றே விற்பனை செய்யப்பட்ட சாமான்கள் எடுத்துச் செல்லப்பட வேண்டும்.

டி. ஜே. ஜயசிங்க,
பதில் அதிபதி.

வளிமண்டல ஆய்வுப் பகுதி,
புல்லேர்ஸ் வீதி,
கொழும்பு 7,
1960 ம் ஆண்டு செப்டெம்பர் மீ 6 ந் உ.
8879

### உபயோகமற்ற பொருட்களின் பிரசித்த ஏலவிற்பனை

1960 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12 ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு, இரத்துமலானை அத்திடிய தெருவிலுள்ள உதவி ரேடியோ எஞ்சினியரின் காரியாலயத்தில், ரேடியோ மாற்று உறுப்புக்கள், நியனைப்பு சாதனங்கள், மற்றும் உபயோகமற்ற பொருட்கள் பிரசித்த ஏல விற்பனை செய்யப்படும். விற்பனைக்கிருக்கும் பொருட்களின் நிரலை, சிவில் விமானப் போக்குவரத்து அதிபதி, த.பெ. இல. 535, கொழும்பு 1, என்ற முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

2. விற்பனைக்கிருக்கும் பொருட்களை, விற்பனைத் தினத்தன்று காலை 9 மணி தொடக்கம் உதவி ரேடியோ எஞ்சினியரின் காரியாலயத்தில் பார்வையிடலாம்.

3. விற்பனையின்போது பொருட்களை வாங்குவோர், வாங்கிய பொருட்களுக்குரிய தொகையைக் காசாக அவ்விடத்திலேயே கொடுப்பதோடு, வாங்கிய பொருட்களை 24 மணித்தியாலங்களுக்குள் எடுத்துச் சென்று விடவேண்டும்.

இ. எம். விஜயநாயக்க,
சிவில் விமானப் போக்குவரத்து அதிபதி.

கொழும்பு 1,
1960 ம் ஆ செப்டெம்பர் மீ 12 ந் உ.
9082—1

### உபயோகமற்ற பொருட்களின் பிரசித்த ஏலவிற்பனை

1960 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 14 ந் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு, காங்கேசன்துறையிலுள்ள யாழ்ப்பாண ஆகாயவிமானத் துறையில் பெருவாரியான உபயோகமற்ற பொருட்கள் பிரசித்த ஏலவிற்பனை செய்யப்படும். விற்பனைக்கிருக்கும் பொருட்களின் நிரலை, சிவில் விமானப் போக்குவரத்து அதிபதி, த.பெ. இல. 535, கொழும்பு 1 என்ற முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

2. விற்பனைக்கிருக்கும் பொருட்களை, 13.10.60 அன்று பிற்பகல் 2 மணி தொடக்கம் 4.30 மணிவரையும், விற்பனைத் தினத்தன்று காலை 9 மணி தொடக்கம் விமானத்துறையில் பார்வையிடலாம்.

3. விற்பனையின்போது பொருட்களை வாங்குவோர், வாங்கிய பொருட்களுக்குரிய தொகையைக் காசாக அவ்விடத்திலேயே கொடுப்பதோடு, வாங்கிய பொருட்களை 24 மணித்தியாலங்களுக்குள் எடுத்துச்சென்று விடவேண்டும்.

இ. எம். விஜயநாயக்க,
சிவில் விமானப் போக்குவரத்து அதிபதி.

கொழும்பு 1,
1960 ம் ஆ செப்டெம்பர் மீ 12 ந் உ.
9082—2

## விளம்பரம்

1960 ம் ஆண்டு புரட்டாதி (செப்டெம்பர்) மாதம் 26 ந் திகதி திங்கட்கிழமை அரசாங்க விடுமுறையாக இருப்பதால், 1960 ம் ஆண்டு புரட்டாதி (செப்டெம்பர்) மாதம் 30 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1960 ம் ஆண்டு புரட்டாதி (செப்டெம்பர்) மாதம் 24 ந் திகதி சனிக்கிழமை பி.ப. 12.30 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேர வேண்டுமென்று இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

பேர்னுர்ட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1960 ம் ஆ புரட்டாதி (செப்டெம்பர்) மீ 9 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.